BENEVOLENT IAS ACADEMY
1626A, Sri Vinayaga Complex, Avinashi Road, Hope College,
Peelamedu (PO), Coimbatore – 641004.
Cell: +91-9787731607/9787701067.
Web: www.benevolentacademy.com E-Mail:benevolentacademy@gmail.com

# DAILY IMPORTANT CURRENT AFFAIRS

## TNPSC Group I, II/IIA & IV

DATE: 09.04.2025

### 1) விதை ஆராய்ச்சி மையம் – காந்திநகர், குஜராத்

- குஜராத், காந்தி நகரில் உள்ள இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு தொழிற்சாலையில் விதை ஆராய்ச்சி மையம் ஒன்றை உள்துறை அமைச்சர் அமித்ஷா அடிக்கல் நாட்டினர்.
- தரமான மற்றும் வீரியமான விதைகள் உற்பத்தியை நோக்கி இந்த ஆராய்ச்சி மையம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

### 2) WBA சௌந்தரபாண்டியன் மணி மண்டபம்



திராவிட இயக்க முன்னணி தலைவர் WBA சௌந்தர பாண்டியன் மணிமண்டபம் திண்டுக்கல் பட்டிவீரன்பட்டியில் அமைய உள்ளது.

**WBA சௌந்தர பாண்டியன்:**

- ✓ இவர் நீதி கட்சி தோற்றுவித்த முன்னோடிகளில் ஒருவர்.
- ✓ 1929 ஆம் ஆண்டு முதல் சுயமரியாதை இயக்க மாநாட்டை தலைமை ஏற்று நடத்தியவர்.
- ✓ 1920 முதல் 1937 வரை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்.

### 3) வக்ஃப் வாரியம் - முதல் மாநிலம் கேரளா

வக்ஃப் திருத்த சட்டப்படி வக்ஃப் வாரியம் அமைக்கும் முதல் மாநிலம் கேரளா ஆகும்.

**4) ஜம்மு காஷ்மீர் ஹூரியத் மாநாடு அமைப்பு**

- இது ஒரு பிரிவினை வாதத்தை கொள்கையாகக் கொண்ட அமைப்பு ஆகும். இதிலிருந்து மக்கள் இயக்கம், ஜனநாயக அரசியல் இயக்கம் போன்றவை விலகி உள்ளது.
- **2019 ஆகஸ்ட் 5** விதி 370 ஜம்மு காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டது. பின் ஜம்மு காஷ்மீர், ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் என்ற இரு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டது.

**குறிப்பு:**

- உலகின் மிக உயரமான பாலம் காஷ்மீர் பள்ளத்தாக்கு செனாப்பில் உள்ளது (1178 அடி உயரம்)

**5) பைசாகி விழா - சீக்கிய புத்தாண்டு**

- சீக்கிய அறுவடை காலத்தின் தொடக்கத்தை குறிக்கும் பைசாகி விழா **பாகிஸ்தானில்** நடைபெறுகிறது.
- இந்திய யாத்திரிகர்களுக்கு விழாவில் பங்குபெறும் வகையில் 6500 க்கு மேல் பாகிஸ்தானால் விசா வழங்கப்பட்டுள்ளது.
- 1974 இல் இரு நாடுகளுக்கு (இந்தியா மற்றும் பாகிஸ்தான்) இடையே **மத வழிபாட்டு தலங்களுக்கு செல்ல நடைமுறை பரஸ்பரம் ஒப்பந்தம்** மேற்கொள்ளப்பட்டது.
- இது ஏப்ரல் 13 & 14-ஆம் தேதிகளில் கொண்டாடப்படுகிறது.
- ஏப்ரல் 13, 1919 பைசாகி திருநாள் - ஜாலியன் வாலாபாக் படுகொலை

6) **13வது இந்தியா பிரிட்டன் பொருளாதாரப் பேச்சு வார்த்தை**

- **லண்டனில்** நடைபெற உள்ள இந்தியா - பிரிட்டன் பொருளாதார பேச்சுவார்த்தையில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பங்கேற்கிறார்.

7) **குஜராத், அகமதாபாத்தில் காங்கிரஸ் செயற்குழு கூட்டம்**

- மகாத்மா காந்தி இந்திய தேசிய காங்கிரசுக்கு தலைமை ஏற்று 100 ஆண்டுகள் நிறைவு பெற்றது.
- **சர்தார் வல்லபாய் படேல் 150 வது பிறந்தநாள்** நினைவு கூற அகமதாபாத்தில் இந்த கூட்டம் கூட்டப்பட்டது.
- 1885 - இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றம்
- இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடு குஜராத்தில் ஐந்து முறை ஏற்கனவே நடைபெற்ற நிலையில் தற்போது ஆறாவது முறையாக குஜராத்தில் நடைபெற உள்ளது.

- சுதந்திரத்திற்கு பிறகு நடக்கும் இரண்டாவது செயற்குழு கூட்டம். அகமதாபாத்தில் இது மூன்றாவது முறையாகும்.

## 8) அமராவதி மேம்பாட்டு திட்டம்

- ஆந்திரா தலைநகர் - அமராவதி மேம்பாட்டு திட்டம் - உலக வங்கி ரூபாய் 4200 கோடி, ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) ரூபாய் 3600 கோடி வழங்குகிறது மற்றும் மத்திய அரசு ரூபாய் 1400 கோடி வழங்குகிறது.
- அக்டோபர் 2015, அமராவதி நகருக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

## 9) சார்லஸ்டன் ஓப்பன் மகளிர் டென்னிஸ் போட்டி

அமெரிக்காவில் நடைபெற்ற சார்லஸ்டன் ஓப்பன் மகளிர் டென்னிஸ் போட்டியில் ஜெசிக்கா பெகுலா சாம்பியன் பட்டம் வென்றார்.

## 10) NTA (தேசிய தேர்வுகள் முகாம்)

NTA - National Testing Agency (தேசிய தேர்வுகள் முகாம்) சார்பில் நடத்தப்படும் போட்டி தேர்வு சீர்திருத்தங்கள் மேற்கொள்ள மற்றும் பாதுகாப்பு நடைமுறை குறித்து மறு ஆய்வு செய்ய குழு ஒன்றை ஜூலை 2024ல் மத்திய அரசு அமைத்தது. குழு தலைவராக **K. ராதா கிருஷ்ணன்** அவர்களும் மற்றும் ஏழு உறுப்பினர்களும் குழுவில் உள்ளனர்.

## 11) 2025 உலக தேயிலை ஏற்றுமதி

- 2025 உலக தேயிலை ஏற்றுமதியில் இந்தியா மூன்றாவது இடம் வகிக்கிறது முதலிடம் கென்யாவும், இரண்டாம் இடம் சீனாவும் இந்த பட்டியலில் உள்ளது. மூன்றாம் இடம் பெற்றுள்ள இந்தியா 15,481 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதி செய்துள்ளது.
- 2024 உலக தேயிலை ஏற்றுமதியில் இந்தியா நான்காவது இடம் பெற்றிருந்தது. முதல் மூன்று இடங்களை கென்யா, சீனா மற்றும் ஸ்ரீலங்கா பெற்றிருந்தது.